இனிமையான குழந்தைகளே! ஞான ரத்தினங்களின் கொடுக்கல் வாங்கல் மூலமாக நீங்கள் ஒருவர் மற்றவரை பாலனை (வளர்க்க) செய்ய வேண்டும், உங்களிடையே மிகமிக அன்போடு வாழ வேண்டும்

கேள்வி: வியாதி அல்லது ஊழ்வினை (கர்ம வினையின் சுமை) இருக்கும் பொழுது கூட எந்த ஆதாரத்தில் அளவற்ற குஷியுடன் இருக்க முடியும்?

பதில்: ஞான மனனம் (விசார் சாகர் மந்தன்) செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ஒரு ஊழ்வினைப் பயன் அல்லது வியாதி வரும் பொழுதும் உங்களிடம் நீங்களே இவ்வாறு உரையாடுங்கள் - இப்பொழுது நாம் 84 பிறவிகளின் பாகத்தை முடித்துவிட்டோம். இது பழைய செருப்பு ஆகும். இந்த பழைய கணக்கு வழக்கைத் தீர்க்க வேண்டும். பின் நாம் 21 பிறவிகளுக்கு எல்லா வியாதிகளிலிருந்தும் விடுபட்டு விடுவோம். எந்த ஒரு வியாதியும் விலகிக் கொண்டேபோகிறது எனும் போது, குஷி ஏற்படுகின்றது அல்லவா?

பாடல்: மாதா, ஓ மாதா.....

ஓம்சாந்தி. இது தாய்மார்களின் மகிமை ஆகும். வந்தே மாதரம். ஹே மாதா, நீங்கள் சிவபாபா வின் பொக்கிஷத்திலிருந்து அனைவரையும் பாலனை செய்கின்றீர்கள். உங்களுக்கு சிவபாபா வின் பொக்கிஷத்திலிருந்து ஞான ரத்தினங்களின் கஜானா கிடைக்கிறது. அல்லது ஞான அமிர்தத்தின் கலசத்திலிருந்து உங்களுக்கு பாலனை (போஷாக்கு) ஆகிறது. உண்மையில் மகிமை சிவபாபாவினுடையது ஆகும். அவர் செய்பவர் மற்றும் செய்விப்பவர் ஆவார். மாதா ஜகதம்பா ஆவார். அவசியம் இன்னும் மற்ற தாய்மார்களும் இருப்பார்கள். எனவே அந்த தாய்மார்களுக்கும் மகிமை உள்ளது. ஒரு தாய் மிக மிக நன்றாக பாலனை செய்கிறார். சிவபாபாவின் யக்ஞத்தில் இருப்பவர்களுக்கு ஸ்தூலத்திலும் பாலனை ஆகிறது மற்றும் அழிவற்ற ஞான ரத்தினங்கள் மூலமாகவோ அனைவருக்கும் பாலனை ஆகிறது. பாலனை செய்பவர்கள் பெரும்பான்மையோர் தாய்மார்கள் ஆவார்கள். நிறைய சகோதரர்கள் கூட சகோதரிகளை பாலனை செய்கிறார்கள். அப்படி இன்றி சகோதரி மட்டும் சகோதரனுக்கு பாலனை செய்கிறார் என்பதல்ல. இருவருமே ஞான ரத்தினங்களின் பரிமாறுதல் மூலமாக ஒருவருக்கொருவர் - சகோதரி சகோதரனுக்கு, சகோதரன் சகோதரிக்கு பாலனை வழங்கு கிறார்கள். குழந்தைகள் மற்றும் அன்புடன் இருக்க வேண்டும். இந்த உலகத்திலோ ஒருவருக் கொருவர் விகாரம் தான் கொடுக்கிறார்கள். எனவே ஒருவர் மற்றவருக்கு எதிரி ஆனது போலாகும். இங்கு அழியாத ஞான ரத்தினங்களின் கஜானா அளிக்கிறார்கள். அவர்களோ கற்களை வீசுவது போல. ஏனெனில் இருப்பதே கல் புத்தியாக. அப்படி இன்றி கற்களை உண்மையில் வீசுகிறார்கள் என்பதல்ல. இதுவோ புரிந்துக் கொள்ள வேண்டியது நீங்கள் சகோதர சகோதரிகள் பிரம்மா குமார் குமாரிகள் ஆவீர்கள். உங்களுடைய பெயர் கூட மிகவும் உயர்ந்தது ஆகும். பிரம்மா குமாரி இருக்கிறார்கள் என்றால் அவசியம் குமாரர்களும் உள்ளார்கள். பிரஜாபிதா பிரம்மா இருக்கிறார் என்றால் அவசியம் பிராமண பிராமணிகளும் இருப்பார்கள். போர்டு படித்து பயந்து விடக்கூடாது.

பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் அவசியம் பிரம்மா குமார் குமாரிகள் இருப்பார்கள். இது புத்தி மூலமாக புரியப்படுகிறது.

பாடலில் மகிமை தாயினுடையது ஆகும். ஜகதம்பா சரஸ்வதி என்று கூறினாலும் கூட அவசியம் புத்திரர்கள் மற்றும் புத்திரிகள் இருப்பார்கள். அவசியம் குடும்பம் இருக்கும். இதுவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் அல்லவா? மேலும் புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். பிரம்மா தான் பிரஜாபிதா பிரம்மா என்று அழைக்கப்படுகிறார். இவர் சாகார சிருஷ்டியின் தந்தை ஆவார். பிரஜாபிதா பிரம்மா மூலமாக பிராமண குலத்தின் படைப்பு ஆகியது என்று பாடப்பட்டுள்ளது. ஆதி சனாதனத்திற்கு முதன் முதலிலேயே பிராமணர்கள் ஆகிவிடு கிறார்கள். உண்மையில் ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் என்று கூறுவது தவறு ஆகும். அதுவோ சத்யுகத்தின் தர்மம் ஆகும். இந்த ஆதி சனாதன பிராமணர்களின் தர்மம் மறைந்து விட்டுள்ளது. பரமபிதா பரமாத்மா பிரஜாபிதா பிரம்மா மூலமாக பிராமண தர்மத்தைப் படைக்கிறார். எனவே இந்த சங்கமயுகம் தேவி தேவதா தர்மத்தை விடவும் உயர்ந்ததாக ஆகிவிட்டது. முதலில் இருப்பது இந்த பிராமண தர்மம் ஆகும். இதை உச்சி குடுமி என்று கூறுகிறார்கள். இது சங்கமயுக ஆதி சனாதன பிராமண தர்மம் என்று கூறப்படும். இது புரிந்து கொள்ள வேண்டிய எவ்வளவு நல்ல ரகசியம் ஆகும். யார் வந்தாலும் முதலில் அவருக்கு தந்தையின் அறிமுகம் கொடுங்கள் என்று பாபா புரிய வைக்கின்றார். இது முக்கியமானது ஆகும். பிராமணர் களுக்கோ இராஜதானி கிடையாது. சத்யுக தேவதா சாம்ராஜ்யம் உங்களுடைய ஈஸ்வரிய பிறப்புரிமை ஆகும் என்று எழுதப்பட்டுள்ளது. தேவி தேவதா தர்மம் என்பது தான் சரி. ஆனால் அவர்களுக்கு (தேவதைகளுக்கு) இந்த ராஜதானி எப்பொழுது மற்றும் எப்படி கிடைக்கிறது என்பது பற்றியும் புரிய வைக்க வேண்டியுள்ளது. எனவே திரிமூர்த்தியின் படம் அவசியம் முன்னால் வைக்க வேண்டும். இதில் சொர்க்கத்தின் அரசாட்சி உங்கள் பிறப்புரிமை ஆகும் என்று எழுதப் பட்டுள்ளது. யார் மூலமாக என்பதும் எழுதப்பட வேண்டும். இந்த போர்டு எழுதி ஒவ்வொரு வரும் தங்கள் வீட்டின் வெளியே மாட்ட வேண்டும். எப்படி அரசாங்க அதிகாரிகளுக்கு போர்டு உள்ளது அல்லவா? ஒரு சிலரிடம் பேட்ஜ் இருக்கும். எல்லோருக்கும் அவரவர் அடையாளம் இருக்கும். உங்களுக்குக் கூட அடையாளம் இருக்க வேண்டும். பாபா டைரக்ஷன் கொடுக் கின்றார். நடைமுறைக்கு எடுத்து வருவது குழந்தைகளின் வேலை அல்லவா? மிகவும் விரிவாக சேவை செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமான பொருள் ஆகும். டாக்டர், வழக்கறிஞர் ஆகிய எல்லோருடைய வீடுகளிலும் பெயர் பலகை தொங்கவிடப்பட்டிருக்கும் அல்லவா? உங்களுடையதும் போர்டு மாட்ட வேண்டும். சிவபாபாவிடமிருந்து பிரம்மா மூலமாக சொர்க்கத்தின் அரசாட்சி எப்படி கிடைக்கிறது என்பதை வந்து புரிந்து கொள்ளுங்கள். பாபா டைரக்ஷன் கொடுக்கின்றார். மனிதர்கள் போர்டு பார்த்து ஆச்சரியப்படுவார்கள். புரிந்து கொள்வதற்காக உள்ளே வருவார்கள். மாடி வீடுகளுக்கு வெளியில் கூட போர்டு மாட்டலாம். யாருக்கு என்ன தொழிலோ அந்த போர்டு மாட்ட வேண்டும். ஒருவர் மற்றவரிடம் கற்க வேண்டும். ஆனால் குழந்தைகள் மீது நிறைய மாயையின் தாக்குதல் ஏற்படுகிறது. நாம் பாபாவிடம் செல்கிறோம் என்ற நிச்சயம் இல்லை. பிறவிகளின் பார்ட் முடிந்தது. பிறகு புது உலகம் சொர்க்கத்தில் வந்து ஆஸ்தி எடுப்போம் என்பது நினைவில் இருப்பதில்லை. பாபா கூறுகிறார், தாராளமாக காரியங்கள் எல்லாம் செய்யுங்கள். பிறகு

எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ பாபாவை நினைவு செய்யுங்கள். இது அனைவருக்குமே கடைசி பிறவி என்ற தண்டோரா நீங்கள் அடித்துக் கொண்டேயிருங்கள். மறுபிறவி மறுபடியும் இந்த மரண உலகத்தில் எடுக்கக்கூடாது. மரண உலகம் இப்பொழுது முடியப்போகிறது என்பதை நீங்களும் அறிவீர்கள். முதலில் நிர்வாண தாமம் செல்ல வேண்டும். இவ்விதமாக உங்களிடமே நீங்கள் உரையாட வேண்டும். இது ஞான மனனம் செய்தல் என்று கூறப்படுகிறது. நீங்கள் கர்மயோகி ஆவீர்கள் என்று தந்தை கூறுகின்றார். உங்களுக்கு ஆமை போன்ற பிராணியின் அறிவு கூட இல்லையா? அது கூட சரீர நிர்வாகத்திற்காக புல் ஆகியவை சாப்பிட்டு பின் கர்ம இந்திரியங் களை ஒருமுகப்படுத்தி அமைதியாக அமர்ந்து கொண்டு விடுகிறது. குழந்தைகளாகிய நீங்களோ தந்தையின் நினைவில் இருக்க வேண்டும். சுயதரிசன சக்கரத்தை சுற்ற வேண்டும். தங்களை மாஸ்டர் விதை (பீஜ்) ரூபம் என்று உணர வேண்டும். விதைக்குள் மரம் பற்றிய முழு ஞானம் இருக்கும் - இதன் உற்பத்தி மற்றும் பாலனை எப்படி ஆகிறது - டிராமாவில் 84 பிறவியின் சக்கரம் எப்படி சுற்றுகிறது? 84 பிறவியின் சக்கரத்திற்காக இந்த கால சக்கரத்தின் படம் அமைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் ஆத்மா 84 லட்சம் ஜீவராசிகளுக்குள் செல்கிறது என நினைக் கிறார்கள். ஆனால் நீங்கள் 84 பிறவிகள் மட்டுமே எடுக்கிறீர்கள் என்று உங்களுக்கு தந்தை புரிய வைக்கின்றார். யார் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தினரோ அதாவது பிராமணரி லிருந்து தேவதை ஆகிறார்களோ அவர்களுக்குத் தான் 84 பிறவிகள் இருக்கும். நீங்கள் 84 பிறவிகளை அறிந்துள்ளீர்கள். பிரம்மாவின் இரவு மற்றும் பிரம்மாவின் பகல் என்று கூறு கிறார்கள். இதில் 84 பிறவிகள் வந்து விடுகிறது. திரிமூர்த்தி போர்டு செய்து இவ்வாறு எழுத வேண்டும் - இது ஈஸ்வரிய பிறப்புரிமை ஆகும். பெற வேண்டும் என்றால் பெற்றுக் கொள்ளுங் கள். இப்பொழுது இல்லையெனில் எப்பொழுதுமே இல்லை. இந்த வரப்போகும் மகாபாரத போருக்கு முன்னதாக புருஷார்த்தம் செய்ய வேண்டும்.

இராமர் (சிவன்) என்ன கொடுக்கின்றார் மற்றும் இராவணன் என்ன கொடுக்கின்றான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அரைக் கல்பம் இராம இராஜ்யம் மற்றும் அரைக் கல்பம் இராவண இராஜ்யம் ஆகும். அப்படியின்றி பரமாத்மா தான் துக்கம் கொடுக்கின்றார் என்பதல்ல? துக்கம் அளிப்பவையோ 5 விகாரங்கள் என்ற இராவணன். அவன் தான் விகாரியாக ஆக்குகிறான். குழந்தைகளுக்கு பல்வேறு வழிகளில் தினமும் விளக்கங்கள் கிடைத்துக் கொண்டேயிருக் கின்றன. எனவே குஷியாக இருக்க வேண்டும் அல்லவா? சிவபாபா தினமும் படிப்பிக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி இன்றி சாகாரத்தை நினைவு செய்வதல்ல. சிவபாபா நமக்கு பிரம்மா பாபா மூலமாக சகஜ இராஜயோகம் கற்பிக்கிறார். சிவபாபா வருவதே பிரஜாபிதா பிரம்மாவிற்குள். வேறு யாரையுமே பிரஜாபிதா பிரம்மா என்று கூறமுடியாது. பிராமணர் கூட அவசியம் வேண்டும். ஒரு விநாடியில் முக்தி ஜீவன் முக்தியின் ஆஸ்தி அல்லது இராஜ்ய பாக்கியம் பெறுங்கள் என்று பாடப்பட்டுள்ளது. நாம் சிவபாபாவின் குழந்தைகள் ஆவோம் என்று குழந்தைகள் கூறுகிறார்கள். அவர் இருப்பதே சொர்க்கத்தின் படைப்புக் கர்த்தாவாக. எனவே அவசியம் நமக்கும் சொர்க்கத்தின் அரசாட்சியை அளிப்பார். பாபா எவ்வளவு அதிசயமானவர் என்றும் பாடப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் சிவபாபா வினுடையவர் ஆகி உள்ளோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். சிவபாபாவை அவசியம் நினைவு செய்ய வேண்டும். எப்படி

குழந்தைகள் தத்து எடுக்கப்படும் பொழுது நான் முதலில் இன்னாரின் குழந்தையாக இருந்தேன். இப்பொழுது இன்னாருடையவராக ஆகியுள்ளேன் என்று தெரிந்து கொள்ளும்பொழுது முதலாமவரிடமிருந்து மனம் அகன்று கொண்டேபோகும். மற்றும் இரண்டாமவரிடம் மனம் இணைந்து கொண்டேபோகும். இங்கு கூட நாம் அவ்வாறே கூறுவோம். நாம் சிவபாபாவின் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் ஆவோம் பின் அந்த லௌகிக தந்தையை நினைவு செய்வதால் நன்மை தான் என்ன? மிக அன்பிற்குரிய தந்தை இவ்வளவு பெரிய செல்வம் அளிக்கக்கூடியவர். தந்தை கூட உழைத்து தான் குழந்தைகளை தகுதி யுடையவர் ஆக்குகிறார் அல்லவா? அப்பேர்பட்ட தந்தையை நீங்கள் அடிக்கடி மறந்து விடுகிறீர்கள். மற்ற எல்லோருமோ உங்களுக்கு துக்கம் கொடுக்கக் கூடியவர்கள் ஆவார்கள். பிறகும் அவர்களை நினைவு செய்து கொண்டேயிருக்கிறீர்கள் மற்றும் தந்தையாகிய என்னை நீங்கள் மறந்து விடுகிறீர்கள். தாராளமாக உங்கள் வீட்டில் இருங்கள். ஆனால் பாபாவை நினைவு செய்யுங்கள். இதில் உழைப்பு தேவை. என்னுடையவராக ஆகியிருங்கள் அவ்வளவே! நிரந்தரமாக என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் புது உலகத்தை நினைவு செய்யுங்கள் இதுவோ முழு சுடுகாடு ஆக வேண்டியுள்ளது. நீங்கள் என்னுடையவர் ஆனீர்கள் என்றால் உலகிற்கு எஜமானர் ஆவீர்கள். நாம் பாபாவினுடையவர் ஆகி உள்ளோம். பிறகு சொர்க்கத் திற்கு எஜமானராக வருங்காலத்தில் ஆவோம் என்பது உங்களுக்குத் தெரியும். அளவு கடந்த குஷி இருக்க வேண்டும்.

இது பழைய சரீரம் என்பதும் உங்களுக்குத் தெரியும். வினைப்பயனை அனுபவிக்க வேண்டி வருகிறது. மம்மா பாபா கூட குஷியுடன் வினைப்பயனை அனுபவிக்கிறார்கள். பிறகு வருங்கால 21 பிறவிகளுக்கான சுகம் எவ்வளவு உயர்ந்தது. இதுவோ பழைய செருப்பு ஆகும். கர்ம கணக்கை அனுபவித்துக் கொண்டேயிருப்போம். பிறகு 21 பிறவிகளுக்கு இதிலிருந்து விடுபட்டுவிடுவோம். ஏதாவது நோய் விடுபட்டுபோனால் குஷி ஆகிறது அல்லவா? இப்பொழுது பல பிறவிகளுக்கான துயரங்கள் அகன்று விடும் என்பதை நீங்களும் அறிந்துள்ளீர்கள். இப்பொழுது நாம் பாபாவிடம் செல்கிறோம். இது தான் ஞான மனனம் செய்து குறிப்புகள் எடுப்பது. பாபா ஆலோசனை கூறுகின்றார் - இவ்விதமாக உங்களிடம் பேசுங்கள். நாம் 84 பிறவி சக்கரத்தை முடித்து விட்டோம். இப்பொழுது தந்தையிடம் செல்கிறோம் பிறகு பாபாவின் ஆஸ்தியை எடுப்போம். சாட்சாத்காரம் கூட செய்கிறீர்கள். இச்சமயம் தென்படுவது, தென் படாதது இரண்டுமே உள்ளது. மம்மாவிற்கு எந்த ஒரு சாட்சாத்காரம் கூட ஆகவில்லை. பாபா விற்கோ விநாசம் மற்றும் ஸ்தாபனையின் சாட்சாத்காரம் ஆகியது. இவருக்கு வருங்காலத்தின் சாட்சாத்காரம் மிக சரியாக ஆகியது. ஆனால் முதலில் நாம் இந்த விஷ்ணுவாக ஆகப்போகிறோம் என்பது புரிந்திருக்கவில்லை. பின்னால் புரிந்து கொண்டார். நாம் இந்த விகாரி இல்லற தர்மத்திலிருந்து இப்பொழுது நிர்விகாரி கிரஹஸ்த தர்மத்தில் செல்கிறோம். நீங்களும் அவ்வாறே. நீங்கள் கூட பாபாவின் படிப்பு மூலம் அவ்வாறு ஆகிறீர்கள். ஓட்டப் பந்தயம் போல முன்னேறிச் செல்ல வேண்டும். மற்றபடி பாட்டில் மம்மாவின் மகிமை உள்ளது. ஜகதம்பா என்று யாருக்குக் கூறப்படுகிறது என்பதை நீங்களோ தெரிந்துள்ளீர்கள். உண்மையில் மாதா - பிதா யார்? மாதா பிதா என்று கூறும் பொழுது ஜகதம்பா நினைவிற்கு வரமாட்டார்கள். அவரோ நிராகார் ஆவார். இது உங்கள் புத்தியில் உள்ளது.

தந்தையோ காட்ஃபாதர் என்பது சரி. அவரோ நிராகார் ஆவார். தாயோ நிராகார் ஆக இருக்க முடியாது.

ஃபாதர் நிராகார் ஆவார். அவசியம் ஆஸ்தி அளிப்பவர், எனவே இங்கு வரவேண்டியுள்ளது அல்லவா? வந்து தனது அறிமுகம் அளிக்க வேண்டியுள்ளது. எனவே அவருக்கு அவசியம் தாய் வேண்டும். எனவே இந்த பிரம்மா பெரிய தாய் ஆகிவிட்டார். தாதா (தாத்தா) நிராகார் ஆவார். எவ்வளவு அதிசயமான ஞானம் இது. ஆனால் இவர் ஆண் ஆகிவிட்டார் ஏனெனில் முக வம்சாவளி (வாய் மூலம் ஞானம் கேட்டு பிறந்த) ஆகும் அல்லவா? இது மிகவும் அதிசயமான ஞானம் ஆகும். எவ்வளவு ஆழமான ரகசித்தை புரிய வைக் கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். தாய் தந்தை யார் என்பது யாருடைய புத்தியிலும் பதியவில்லை. அவர்கள் கிருஷ்ணர் என்று நினைக் கின்றார்கள். அந்த ஒரு வித்தியாசம் செய்து விட்டார்கள். இது தான் ஒரே ஒரு தவறு என்று கூறப் படுகிறது. யாராவது நிமித்தமாக வேண்டும் அல்லவா? என்ன ஒரு தவறு ஏற்பட்டதால் பாரதம் இவ்வளவு துக்கமடைந்துள்ளது? யார் மறக்கச் செய்தது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள்? மறப்பதற்கான காரணம் என்ன? உண்மையில் மாயை இராவணன் முகத்தை திருப்புமாறு செய்துவிட்டான். எப்படி பாபா செய்பவரும் செய்விப்பவரும் ஆவாரோ அதேபோல மாயை கூட செய்பவன் செய்விப்பவன், துக்கத்தின் வள்ளல் ஆவான். அவன் செய்பவன் செய்விப்பவன் - அவர் செய்பவர், செய்விப்பவர் (சுகதாதா) மாயை தந்தையிடமிருந்து முகத்தைத் திருப்புமாறு செய்விக்கிறது. இப்பொழுது சுயம் தந்தை கூறுகிறார் - ஹே! ஆத்மாக்களே, நிரந்தரமாக என்னை நினைவு செய்யுங்கள் நீங்கள் எனது குழந்தைகள் ஆவீர்கள். நீங்கள் ஆஸ்தி பெற வேண்டும். என்னை நினைவு செய்தால் போதுமானது - விகர்மங்கள் விநாசம் ஆகிவிடும். எல்லையில்லாத தந்தையின் வழி பிரம்மா மூலமாக கிடைக்கிறது. குரு பிரம்மா என்று கூறுகிறார்கள் அல்லவா? இதுவோ பக்தி மார்க்கத்தின் மகிமை ஆகும். குரு பிரம்மா பிரசித்ததம் ஆகும். அவர்கள் பின் இறைவன் சர்வவியாபி என்று கூறிவிடுகிறார்கள். இதற்கு முன்பு நாமும் அவ்வாறே அவர்கள் கூறுவது சரி என நினைத்துக் கொண்டிருந்தோம். மாயை தான் இவர்களை இவ்வாறு கூறச் செய்துள்ளது என்பதை இப்பொழுது தெரிந்துள்ளோம். மாயை கீழே வீழ்த்துவதற்காக தவறுகளைச் செய்விக்கிறது மற்றும் பாபா உயர்த்துவதற்காக தவறற்றவராக ஆக்குகிறார். தந்தை மிகவும் நல்ல பாக்கியத்தை அமைக்கிறார். தந்தையை நினைவு செய்ய வேண்டும். இதுவோ மிகவும் சுலபமாகும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை மற்றும் பாப்தாதாவின் நினைவு, அன்பு மற்றும் குட்மார்னிங். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தன்னை மாஸ்டர் பீஜ் (விதை) ரூபம் என்று உணர்ந்து கர்ம இந்திரியங்களை ஒருமுகப்படுத்தி சாந்தமாக அமரும் அப்பியாசம் செய்ய வேண்டும்.

(2) ஞான மனனம் செய்து குஷியாக இருக்க வேண்டும். மற்றும் குஷி குஷியுடன் பழைய கர்ம கணக்கைத் தீர்க்க வேண்டும். நாம் 84 பிறவி சக்கரம் முடித்து விட்டோம். இப்பொழுது பாபாவிடம் செல்கிறோம் என்று நம்மிடமே நாம் பேச

வேண்டும்.

வரதானம் : மரியாதையை யாசிப்பதற்கு பதிலாக சதா உயர்ந்த மனநிலையில் இருக்ககூடிய அனைவரும் பூஜிக்கும் நிலையில் இருப்பவர் ஆகுக.

நாங்கள் முன்னேறிக் கொண்டே இருக்கிறோம், ஆனால் மற்றவர்கள் எங்களுக்கு முன்னேறு வதற்கான மரியாதை கொடுப்பதில்லை என்று பலர் யோசிக்கிறார்கள். ஆனால் மரியாதை யாசிப்பதற்கு பதிலாக தன் மீதே தானே மரியாதை வைத்தீர்கள் என்றால் மற்றவர்கள் தானாகவே மரியாதை கொடுப்பார்கள். தன் மீது மரியாதை வைப்பது என்றால் தன்னை சதா மகான் சிரேஷ்ட ஆத்மா என அனுபவம் செய்வது. எப்படி மூர்த்தி ஆசனத்தின் மீது அமர்ந்திருந் தால் தான் பூஜைக்குரியதாக கருதப்படுகிறது. அதுபோல நீங்களும் கூட சதா தனது உயர்ந்த மனநிலையில் நிலைத்திருந்தால் பூஜைக்குரியவர் ஆகிவிடுவீர்கள். அனைவரும் உங்களுக்கு மரியாதை கொடுப்பார்கள்.

சுலோகன்: மாயாவை அவமரியாதை செய்யக்கூடியவர்கள் தான் அனைவருடைய மரியாதைக்குரியவர் ஆகிறார்கள்.